

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜூன் 08, 2017 | புரட்சி 16 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00

## கழக மாநாட்டில் நீதிபதி அரிபரந்தாமன் வலியுறுத்தல்

# இந்தியை அலுவல் மொழியாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை நீக்க வேண்டும்





*இந்தியை அலுவல் மொழி என்று அறிவிக்கும் சட்டப் பிரிவுகளை அரசியல் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற போராட்டமே இந்தி எதிர்ப்புக்கான சரியான போராட்டம் என்று சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அரிபரந்தாமன், சென்னை திருவான்மியூர் தெப்பக்குளம் மைதானத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாட்டில் பேசுகையில் வற்புறுத்தினார்.*

“இந்தித் திணிப்பை எதிர்ப்போம்; இழந்து வரும் உரிமைகளை மீட்போம்” என்ற முழக்கத்தை முன் வைத்து, தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாட்டை திராவிடர் விடுதலைக் கழகம், 2017 ஜூன் 4ஆம் தேதி நடத்தியது. மாநாட்டின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று நீதிபதி அரிபரந்தாமன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாம் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல; விருப்பம் உள்ள எந்த மொழியையும் எவரும் படிக்க உரிமை உண்டு. ஆனால் ஒரு மொழியை அதிகாரத்தைப் பயன்படுத்தி திணிக்கும்போதுதான் எதிர்ப்பு வருகிறது. 1938ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கிவிட்டது. பெரியார் தலைமையில் நடந்தது அப் போராட்டம். நாம் இந்தியை எதிர்க்கும்போது அந்தத் திணிப்புக்கான வேர் எங்கே இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அந்த வேரை நீக்குவதற்கான போராட்டத்தை தொடங்க வேண்டும்.

இந்தி - இந்தியாவின் அலுவல் மொழி என்று அரசியல் சட்டத்தின் 17ஆவது அட்டவணையில் 344, 345 மற்றும் 351ஆவது பிரிவுகள் கூறுகின்றன. இந்தப் பிரிவுகள் நீடிக்கும் வரை இந்தித் திணிப்புகள் தொடரவே செய்யும். எனவே இந்தப் பிரிவுகளை சட்டப் பிரிவிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க வேண்டும். அரசியல் சட்டம் இதுவரை 101 முறை திருத்தப்பட்டிருக்கிறது. முதல் திருத்தத்திற்கு காரணமாக இருந்தவரே தந்தை பெரியார் தான். ஆகவே ஆட்சி மொழிப் பிரிவுகளை நீக்கிடும் திருத்தம் கொண்டு வருவதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆட்சி மொழிக்கான சட்டத்தில் இடம் பெற்றுள்ள பிரிவுகள் இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து மொழி களுக்கான சமத்துவத்தை மறுக்கும் பிரிவுகள் ஆகும்.

ஆட்சி மொழி சட்டம் குறித்து அரசியல் நிர்ணய சபையிலேயே சூடான விவாதங்கள் நடந்துள்ளன. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்த இராஜேந்திர பிரசாத், இந்திக்கு ஆதரவாகவே பேசினார்.

நமது அரசியல் நிர்ணய சபை என்பதே மக்களின் பிரதிநிதித்துவம் கொண்டது அல்ல; படித்தவர், பணக்காரர் என்று 10 சதவீதம் பேர் மட்டுமே வாக்களிக்க உரிமை இருந்த நிலையில் அவர்களால்




தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள். சூத்திரர், பஞ்சமர், நந்தன்கள், சம்பூகன்கள் இல்லாத அவையாகவே அது இருந்தது. அம்பேத்கர், அ ரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவர். அவரும் நந்தனின் பிரதிநிதியாக செயல்படக் கூடிய நிலையில் இல்லை. இந்தியை அலுவல் மொழியாக தொடருவதா வேண்டாமா என்ற வாதம் நடக்கவில்லை. அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் தொடரலாமா என்பதுதான் வாதத்தில் மேலோங்கி நின்றது. எண்களைக்கூட உலகம் முழுதும் ஏற்றுக் கொண்ட எண்களுக்கு பதிலாக இந்தி எழுத்து எண்களையே பயன்படுத்த வேண்டும் என்று இந்திக்காரர்கள் வாதாடினார்கள். இந்த விவாதங்களை நாம் படிக்க வேண்டும். மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படி அரசியல் சட்டத்தில் இந்தி ஆட்சி மொழிக்கான பிரிவை நீக்கும் போராட்டத்தை முன்னெடுக்கும் வலிமை பெரியார் இயக்கத்துக்குத் தான் இருக்கிறது என்பது என் கருத்து. (கைதட்டல்)

இப்போதும் இந்துத்துவா சக்திகளால் சீரணிக்கப்பட முடியாத ஒரே தலைவராக பெரியார் தான் இருக்கிறார். நான் ‘இந்துவாக சாக மாட்டேன்’ என்று அறிவித்த அம்பேத்கரையே ‘இந்துத்துவா’ வாதிகள் தங்களுக்கு சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 1956இல் அம்பேத்கர் புத்தமார்க்கத்துக்கு மாறி விட்டார். அதற்குப் பிறகு அவர் பட்டியல் இனத்தைச் சார்ந்த வரும் இல்லை. ஆனால், இந்தியாவில் ஜாதி எந்த மதத்தையும் விட்டு வைக்கவில்லை. உலகம் முழுதும் கிறிஸ்துவ மதம் இருக்கிறது. அங்கு ஜாதி இல்லை; இங்கே கிறிஸ்தவ மதத்திலும் ஜாதி நுழைந்து விட்டது; புத்த மார்க்கத்திலும் நுழைந்து விட்டது.

அதேபோல் இந்தியாவின் வழிகாட்டும் கொள்கை நெறியில் பசு மாடு பற்றி பேசப்படுகிறது. விவசாயத்தை பாதுகாக்க விவசாயத்தை நவீனமாக்க மாடுகள், கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிற பிரிவுகளில் நமக்கு எந்த கருத்து மாறுபாடும் இல்லை. அதன் கடைசி பகுதி பசுவதை கூடாது என்று கூறுகிறது. இந்தப் பிரிவுகளை அரசியல் சட்டத்திலேயே அடிப்படை உரிமையாக சேர்க்க வேண்டும் என்று வாதாடினார்கள். அதை அம்பேத்கர் ஏற்கவில்லை. வழிகாட்டும் கொள்கை நெறியில் தான் சேர்த்தார். இந்த வழிகாட்டும் கொள்கைப் பிரிவைக் காரணம் காட்டி, காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே கேரளா, ஒரு சில வடகிழக்கு மாநிலங்களைத் தவிர, எல்லா மாநிலங்களிலும் ‘பசுவதைத் தடைச் சட்டத்தை’ கொண்டு வந்துவிட்டார்கள். இப்போது பசு மாட்டோடு எருமை, கன்று குட்டி, ஒட்டகத்தையும் சேர்த்து, சந்தைகளில் இறைச்சிக்காக விற்க தடை செய்துள்ளார்கள்.

இதே வழிகாட்டும் கொள்கை நெறியில் மதுவிலக்கு கொள்கையை நாடு முழுதும் அமுல்படுத்த வேண்டும் என்ற பிரிவு இடம் பெற்றிருக்கிறது. அதற்காக சட்டம் இயற்ற தயாராக இல்லை. ஆனால், ‘பசுவதை தடைச் சட்டம்’ மட்டும் வேகமாக வந்து விட்டது. மாநிலங்களின் உரிமையாக இருந்த ‘கல்வி’யை 1976ஆம் ஆண்டு பொதுப் பட்டியலுக்கு கொண்டு போய்விட்டார்கள். மத்திய அரசின் ஒப்புதலின்றி, மாநிலங்கள் கல்விக்கான சட்டங்களைப் போட முடியாது என்ற நிலை வந்து விட்டது. கல்வி பொதுப் பட்டியலுக்கு போனதால்தான் மத்திய அரசு ‘நீட்’ நுழைவுத் தேர்வை - நமது மாநிலத்தில் திணிக்கிறது. தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வே வேண்டாம் என்று நாம் சட்டம் போட்டு விட்டோம். அதையும் மீறித்தான் நுழைவுத் தேர்வு இப்போது திணிக்கப்படுகிறது. 7 கோடி மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறையாண்மை மிக்க தமிழக சட்டசபையின் தீர்மானம் நிராகரிக்கப்படுகிறது. இப்போது தமிழ்நாட்டில் முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் ஆளுநரிடம் போய்விட்டது. பிறகு ஏன் சட்டமன்றம்? ஆளுநரிடமே அதிகாரத்தைக் கொடுத்துவிட வேண்டியதுதானே!

இராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 26 ஆண்டுகாலமாக சிறையில் உள்ள நளினியின் வரலாறு நூலாக வெளி வந்தது. அந்த நூலுக்கு நான் அணிந்துரை எழுதினேன். அதில் நான் எழுப்பிய கேள்வி இதுதான். தேசத் தந்தை காந்தி கொலை வழக்கில் கோட்சே, ஆப்தே இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. கோபால் கோட்சே உள்பட 3 பேருக்கு ஆயுள் தண்டனை; அவர்கள் 18 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு 1966இல் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்தது காங்கிரஸ் அரசுதான். காந்தி கொலை வழக்கிலேயே ஆயுள்

(4ஆம் பக்கம்)

**மாநாட்டுத் தீர்மானங்கள் உள்ளே**

## புரட்சிகர கலை நிகழ்ச்சிகள்; எழுச்சி உரைகள்

# உணர்ச்சிகரமான சென்னை மாநாடு







“இந்தித் திணிப்பை எதிர்ப்போம்; இழந்து வரும் உரிமைகளை மீட்போம்” எனும் முழக்கத்தை முன் வைத்து திருவான்மியூர் தெப்பக்குள மைதானத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாடு 4.6.2017அன்று மாலை 5 மணியளவில் எழுச்சியுடன் தொடங்கியது. சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் - இந்த மாநாட்டை கழக தலைமைக் குழுவின் தீர்மானத்தை ஏற்று நடத்தியது. திருவான்மியூர் பகுதி முழுதும் கழகக் கொடிகள் ஏராளமாகக் கட்டப்பட்டிருந்தன. பெரியார்-அம்பேத்கர் படங்களோடு அமைக்கப்பட்டிருந்த மேடை பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. நகரம் முழுதும் சுவரெழுத்துகள் எழுதப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மாவட்ட செயலாளர் உமாபதி வழிகாட்டுதலில் 20க்கும் மேற்பட்ட கழக இளைஞர்கள் 15 நாள் இரவு பகல் பாராது கடுமையாக உழைத்தனர். மாநாட்டு திடலில் நிரம்பி வழிந்த கூட்டத்துக்கு கழகத் தோழர்கள் நடத்திய துண்டறிக்கை பரப்புரைகளும் விளம்பரங்களுமே பெரிதும் காரணம்.

காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் புரட்சிகர பறை இசை, பாடல், நடனம், நாடகம் மாநாட்டுக்கு உணர்வூட்டின. கலை நிகழ்ச்சிகளின் இடை யிடையே தோழர்கள் உரையாற்றினார்கள். தொடக்கத்தில் மாவட்ட செயலாளர் உமாபதி வரவேற்புரையாற்றினார். மாநாட்டுப் பணிகளுக்கு காவல்துறை தந்த இடையூறுகளையும் மக்கள் தந்த பேராதரவினையும் விளக்கினார். ஆசிரியர் சிவகாமி, வழக்கறிஞர் திருமூர்த்தி, வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன், வழக்கறிஞர் துரை. அருண், காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மகேசு, பேராசிரியர் சரசுவதி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். நீதிபதி அரி பரந்தாமன் சிறப்புரையாற்றினார். மாநாட்டுக்கு உழைத்த கழக செயல் வீரர்களுக்கு கழகத் தலைவர், பொதுச் செயலாளர் கருப்பு ஆடை அணிவித்து, பாராட்டுகளைத் தெரிவித்தனர். இறுதி வரை கூட்டம் கலையவில்லை. கலை நிகழ்ச்சிகளையும் உரைகளையும் கேட்டனர். மாநாட்டு அரங்கிற்கு 1938 இந்தி எதிர்ப்புப் போரில் சிறையில் உயிர் நீத்த நடராசன்-தாளமுத்து பெயர் சூட்டப்பட்டு அவர்கள் படமும் வரையப்பட்டிருந்தது. ஏராளமான பொது மக்கள் மாநாட்டில் பங்கேற்றது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். கழகத் தோழர் மா. தேன்ராஜ் நன்றி கூற, இரவு 10.15 மணியளவில் மாநாடு நிறைவடைந்தது.

**– நமது செய்தியாளர்**



# மாநாட்டுக்கு உழைத்த தோழர்கள்

மாநாட்டுக்கான சுவர் எழுத்தை நகரின் பல்வேறு பகுதிகளில் விழுப்புரம் அய்யனார் எழுதினார். அவருக்கு உறுதுணையாக சுண்ணாம்பு அடித்தல் உள்ளிட்ட பொறுப்புகளையும் வெளியூர் தோழர்களுக்கான 4 வேளை உணவு தயாரிப்பு வேலைகளையும் ஏற்று செயல்பட்டவர் ஆ.வ. வேலு. தோழர்களை ஒருங்கிணைத்து மாவட்ட தலைவர் வேழவேந்தன் செயல் பட்டார். மாவட்ட செயலாளர் இரா.உமாபதி மாநாட்டு பொறுப்புகளை முழுமையாக ஏற்று தோழர்களை வழி நடத்தினார்.

15 நாள்களாக நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி, கடை கடையாக ரூ.10, 20 என்று சிறு சிறு தொகையை ஏழை எளிய மக்களிடம் நன்கொடை பெற்று, அவர்கள் கேள்விகளுக்கு பொறுமையாக விளக்கமளித்து, களப் பணியாற்றிய தோழர்கள் விவரம்:




வில்லிவாக்கம் செந்தில், ந. விவேக், தேன்ராஜ், அருண், பிரபாகரன், ஏசுகுமார், ராஜி, சங்கீதா, இரண்யா, கலைமதி, இளையசிம்மன், இலட்சுமணன், ஜெயபிரகாஷ், பெரியார் யுவராஜ், தமிழ். அனைவரும் மாநாட்டு மேடையில் பாராட்டப் பெற்றனர்.

# பா.ஜ.க.வின் பார்ப்பனிய ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை முறியடிக்க – கழக மாநாடு அறைகூவல்

*4–6–2017 ஞாயிறு அன்று சென்னை, திருவான்மியூரில் நடைபெற்ற 'தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு' மாநாட்டில் நிறை வுரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாநாட்டுத் தீர்மானங்களை முன் மொழிந்தார். தீர்மானங்கள் விவரம்:*

1) 1938ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டுப் பள்ளி களில் இராஜகோபாலாச்சாரி கட்டாயமாக இந்தி மொழிப் பாடத்தைத் திணித்தபோது, 'பெரியார் தலைமையில் தமிழறிஞர்களும் இணைந்துப் போராடி, இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியது தமிழ்நாடு ஆகும். 1965 ஆம் ஆண்டிலிருந்து அலுவல் மொழி இந்தி என்று அரசியல் சட்டம் கூறிய நிலையிலும் தமிழ் நாட்டில் இந்திக்கு இடமில்லை என்று 1968இல் இருமொழித் திட்டத்தை அறிவித்த நாடு தமிழ்நாடு. 1963ஆம் ஆண்டு அலுவல் மொழிச் சட்டம் இந்தியை அலுவல் மொழி என்று அறிவித்த நிலையிலும் அந்த சட்டம் தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருந்தாது என்று 1976ஆம் ஆண்டு நடுவண் அரசின் அலுவல் மொழி விதிகளே ஏற்றுக் கொண்டது என்பது வரலாறு. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்திக்கு இடமே இல்லாத நிலையில் நடுவண் பா.ஜ.க. ஆட்சி இப்போது இந்தித் திணிப்பு வழியாக சமஸ்கிருத பார்ப்பனப் பண்பாட்டைத் திணிக்க முயல்கிறது.

நாடாளுமன்றத்தில் இந்தி பேசும் மாநில அமைச்சர்கள் இந்தியிலேயே பேசுவார்கள் என்றும், தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பாடத் திட்டத்தின்கீழ் இயங்கும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் - விமான நிலைய அறிவிப்புகளில் -மைல் கற்களில் இந்தித் திணிக்கப்படுவதோடு, ஐ.ஐ.டி.யில் சமஸ்கிருதம் கட்டாயமாக்கப்பட் டுள்ளது. பலமொழி, இன, பண்பாடுகளைக் கொண்ட இந்தியத் துணைக்கண்டத்தை, இந்தி - சமஸ்கிருத - இந்து - இந்தியா என்ற ஒற்றைத் தேசமாகக் கட்டமைக்க முயல்கிறது. இந்த ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது என்று நடுவண் அரசிற்கு இம்மாநாடு எச்சரிக்க விரும்புகிறது.

தமிழர்களின் தனித்துவமான சுயமரியாதை - சமூக நீதிப் பண்பாட்டை சீர்குலைக்கும் இந்தப் பார்ப்பனியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திட தமிழர்கள் கட்சி, இயக்க வேறுபாடுகளைக் கடந்து அணி திரளவேண்டும் என்று இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

**தடுப்புக் காவல் சட்டங்கள்**

2) குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்க ஏற்கனவே இந்தியத் தண்டனைச் சட்டம் இருக்கும்போது கூடுதலாக, அரசுகள் தடுப்புக் காவல் சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன. பிணையில் வெளியே வருவதைத் தடுப்பதும், குறைந்தது ஓராண்டுகாலமாவது சிறையில் முடக்கி வைப்பதுமே இதன் நோக்கம். இந்த சட்டங்கள் அரசியல் எதிரிகளைப் பழிவாங்கு வதற்கும், சமூக, அரசியல் செயற்பாட் டாளர்களை ஒடுக்குவதற்குமே பயன்படுத்தப் படுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியில் ரவுலட் சட்டத்தை எதிர்த்தவர்கள் "சுதந்திர" இந்தியா வில் அதைவிடக் கொடூரமான ஒடுக்குமுறை சட்டங்களைக் கொண்டு வந்து மக்களை ஒடுக்குவது ஜனநாயகத்திற்கே தலைகுனிவாகும்.

காஷ்மீரிலும், பல வடகிழக்கு மாநிலங்களிலும் இராணுவச் சட்டங்களே கோலோச்சி வருகின்றன. இத்தகைய தடுப்பு காவல் சட்டங்களை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது மரண தண்டனை வழங்குவதற்கும், பிணையில் வெளிவராமல் சிறைக் காவலில் தடுத்து



வைப்பதற்கும் பயன்படுத்துவது சட்ட விரோத மானது என்பதுடன் தனி மனித சுதந்திரத்தைப் பறிப்பதாகும் என்று அண்மையில் கூட உச்சநீதிமன்றம் இடித்துரைத்திருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் குண்டர் சட்டம் கண்மூடித்தனமாக சமூக செயல்பாட்டாளர்கள் மீதும் ஏவி விடப்படுவது வன்மையான கண்டனத்துக்குரியது. முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு உள்ளான ஈழத்தமிழர் களுக்காக அஞ்சலி தெரிவிக்க சென்னை மெரீனா கடற்கரையில் கூட முயன்ற திருமுருகன் காந்தி, டைசன், இளமாறன், அருண்குமார் ஆகிய தோழர்கள் மீது குண்டர் சட்டத்தை தமிழக அரசு ஏவி விட்டிருப்பது சட்டம் மிக மோசமாக முறையற்றுப் பயன்படுத்தப்படு கிறது என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மறைந்த முதலமைச்சர்ஜெயலலிதா ஈழத்தில் இறுதிப் போரில் நடந்தது இனப்படுகொலையே என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்த அதே குரலை - அதே உணர்வை வெளிப்படுத்த முயன்றவர்கள் மீது "அம்மாவின்" ஆட்சி என்று கூறிக்கொள்கின்றவர்கள் குண்டர் சட்டத்தை ஏவி விட்டிருப்பது- அவர்களின் தலைவர் அறிவித்த கொள்கைகளுக்கு இழைக்கும் துரோகம் என்பதை இம்மாநாடு சுட்டிக் காட்டுவ தோடு, கைது செய்யப்பட்டவர்கள் மீது பிறப்பிக் கப்பட்ட குண்டர் சட்டத்தை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

**பா.ஜ.க. கொல்லைப்புற முயற்சி**

3) தமிழக முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் வலிமையற்ற தலைமையையும், ஆளும் கட்சியில் உருவாகியுள்ள பிளவையும் பயன்படுத்தி- கொல்லைப்புற வழியாக தமிழகத்தில் காலூன்ற - பா.ஜ.க துடிக்கிறது. நடுவண் ஆட்சியின் அதிகாரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் ஆட்சி யாளர்கள் பா.ஜ.க வின் அதிகார மிரட்டல் களுக்கு பணிந்து பச்சைக்கொடி காட்டுவதாகவே தெரிகிறது. அதன்காரணமாகத்தான் பா.ஜ.க வின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்க்கும் போராளிகளை மோசமாக ஒடுக்கு கிறார்கள். அண்மையில் மீத்தேன் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வரும் பேராசிரியர் ஜெய ராமன் உள்ளிட்ட 11 தோழர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மற்றொருபுறம் ஆர்.எஸ்.எஸ் அணி வகுப்புகளுக்குத் தடையின்றி அனுமதி வழங்கப்படுகிறது. தமிழக அரசு மற்றும் காவல்துறையின் இந்தப் போக்கை இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

**'திராவிட நாடு' எழுச்சி**

4) பசு, எருது, எருமை, கன்றுக்குட்டி , ஒட்டகம் ஆகியவற்றை இறைச்சிக்காக சந்தைகளில் விற்கக்கூடாது என்று பா.ஜ.க பிறப்பித்துள்ள உத்தரவு மக்களின் உணவுக் கலாச்சார உரிமை களையும், மாநில உரிமைகளையும் பறிப்பதாகும். உலகிலேயே மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவின் பொருளாதாரத்தையும், விவசாயிகளின் வாழ்வுரிமையையும் கடுமையாக பாதிக்கும் இந்த ஆணையை நடுவண் அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும். உழைக்கும் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் மாட்டிறைச்சியை மதத்தைக் காட்டி தடுக்கவும், அதன் விற்பனைகளுக்கு நெருக்கடிகளை கொண்டு வரவும் முயற்சிப்பது இந்தியாவைப் பார்ப்பன தேசமாக்கும் சூழ்ச்சியே ஆகும். அரசின் இந்த கலாச்சார உரிமைப் பறிப்பு களுக்கு எதிராக தமிழ்நாடு, கேரளம், கர்நாடக மாநிலங்கள் வீறு கொண்டு எழுந்து நிற்கின்றன. இந்த நிலை தொடருமானால் வட நாட்டிலிருந்து தென்னாட்டை பிரித்து விடுங்கள் என்ற போராட்ட முழக்கங்கள் ஒலிக்க தொடங்கியிருப்பது, தென்னகத்தின் கொதி நிலையை உணர்த்துகின்றன என்பதோடு வட நாட்டுப் பார்ப்பன பண்பாட்டுக்கு எதிராக உருவாகி வரும் இந்த எழுச்சியை வளர்த்தெடுப் போம் என்று இந்த மாநாடு உறுதியேற்கிறது.

## மாநிலங்களுக்கு தனி அரசியல் சட்டம்

*இந்திய அரசியலமைப்பு – இந்தியாவை 'மாநிலங்களின் ஒன்றியம்' என்று அறிவிக்கிறது. மாநிலங்கள் இல்லாமல் இந்தியா என்ற நாடு இல்லை; ஆனால் மாநிலங்களின் 'இறையாண்மை'யை ஒடுக்கி, இந்தியாவை ஒற்றை தேசமாக்கி ஒற்றைப் பண்பாடு என்ற பெயரில் பார்ப்பனிய – வேத மதப் பண்பாட்டை – நடுவண் பா.ஜ.க. ஆட்சி கல்வி, மொழி, உணவு, பண்பாட்டுத் துறைகளில் திணித்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே மாநிலப் பட்டியலிலிருந்த கல்வி உரிமை பறிக்கப்பட்டு, ஆள் தூக்கி அடக்குமுறை சட்டங்களும் மாநிலங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. இந்த நிலையில் இந்த உரிமை பறிப்புகளைத் தடுத்திடவும், தமிழ்நாட்டுக்கே உரிய சமூக நீதி – சுயமரியாதைப் பண்பாடுகளை பாதுகாத்து வளர்த்தெடுக்கவும் தமிழ்நாட்டுக்கு தனியான அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் உரிமைப் போராட்டம் தொடங்க வேண்டிய சூழல் உருவாகி விட்டது. அண்டை நாடான மியான்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ள நிலையில் அந்நாட்டில் அடங்கியுள்ள 7 மாநிலங்கள் – 7 மண்டலப் பிரதேசங்கள் தனித்தனியாக அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று மியான்மார் அரசே முடிவெடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆயுதம் தாங்கிப் போரிட்ட போராளிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. மாறி வரும் சர்வதேச சூழல்களைக் கருத்தில் கொண்டு ஒற்றை ஆட்சி – ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை எதிர்க்க தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் தனித்தனியாக அரசியல் சட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

*அய்.நா. பொது அவையின் உரிமை சாசனத்தில் 1514(15)வது பிரிவு 1960ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பு வழங்கியுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இந்தியாவின் பன்முகத் தன்மை பன்முகக் கலாச்சாரத்தைக் காப்பாற்றிட விரும்பும் தேசிய இனங்கள் விரும்பினால் பிரிந்து போகும் உரிமையுள்ள சுய நிர்ணய உரிமை கொண்ட தன்னாட்சி என்ற இலட்சியத்தை நோக்கிய விவாதங்களைத் தொடர வேண்டிய அவசியத்தையும் இம்மாநாடு சுட்டிக் காட்டுகிறது.*

**– சென்னை கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இந்தி எழுத்துகளை அழித்துப் போராட்டம்: தோழர்கள் கைது






2017 ஜூன் 4ஆம் தேதி திருவான்மியூரில் கழக மாநாடு நிறைவடைந்தது. அடுத்த நாள் 5ஆம் தேதி சென்னை சாஸ்திரி பவனில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் பெயர்ப் பலகையில் உள்ள இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்துக்கு தோழர்கள் தயாரானார்கள். வெளியூர்களிலிருந்து மாநாட்டுக்கு வந்த தோழர்கள் மாநாடு முடிந்து மூன்று திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அனைவரும் தனி வாகனங்களில் சாஸ்திரி பவன் எதிரே அழைத்து வரப் பட்டனர். பெண்கள் உள்ளிட்ட 200 தோழர்கள் காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். போராட்டத்தின் கோரிக்கைகள் அடங்கிய ஏராளமான தட்டிகளை கரங்களில் ஏந்தி இந்திப் பண்பாட்டுத் திணிப்பு மத்திய அரசின் பார்ப்பன ஒற்றைக் கலாச்சாரத் திணிப்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி மற்றும் நாமக்கல், சேலம், விழுப்புரம், திருப்பூர், கன்யாகுமரி, நாகை, வேலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்ட கழகத் தோழர்களும், சென்னை மாவட்ட தோழர்களும் பங்கேற்றனர். போராட்டத்தின் நோக்கங்களை விளக்கி பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார். ஒலி முழக்கங்களுடன் தோழர்கள் சாஸ்திரி பவனை நோக்கிச் சென்ற போது காவல்துறை அனைவரையும் தடுத்தது. அப்போது இந்தியில் எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய துணி விளம்பரத்தில் போராட்டத் தலைவர், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தார் கொண்டு இந்தி எழுத்துகளை இந்தி எதிர்ப்பு முழக்கங்களுக்கிடையே அழித்தார்.

அனைவரும் நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தனர். 150 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். பகுதி முழுதும் மின்தடை ஏற்பட்டதால் மண்டபத்திலும் மின் தடை; இரண்டு மணி நேரம் கழித்து மின்சாரம் வந்த பிறகு கழக சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த உணவு தோழர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள், கழகத் தோழர்கள் கொள்கைப் பாடல் களைப் பாடினர். தொடர்ந்து கழகக் கொள்கைகளுக்கு எதிராக முன் வைக்கப்படும் கேள்விகள் - கழக அமைப்பு ஜாதிப் பிரச்சினை உள்ளிட்ட தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு கழகத் தலைவர், பொதுச் செயலாளர் விளக்க மளித்தனர். ஆழமான விவாத அரங்கமாக இது நிகழ்ந்தது. மாலை 6 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## ஈரோட்டில் மாட்டிறைச்சி உணவுடன் கழகக் கூட்டம்

பா.ஜ.க. மோடி பாசிச அரசின், மாடுகளை இறைச்சிக்காக விற்க தடை செய்த சட்டத்தைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக கண்டனக் கூட்டம் 28 .05.2017 அன்று, ஈரோடு சேனாதிபதி பாளையத்தில் மாலை 6 மணியளவில் நடந்தது. ரங்கம்பாளையம் கிருஷ்ணன் தலைமையேற்க, கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். சிவா சடையன் (திருச்செங்கோடு) செல்லப்பன் (மாவட்டத் தலைவர் ஈரோடு தெற்கு) சாமிநாதன் (நாமக்கல் மாவட்டத் தலைவர்) சரவணன் (நாமக்கல் மாவட்டச் செயலாளர்) வெங்கட், ப.இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) ஆகியோர் கண்டன உரையாற்ற வீரா கார்த்திக் (அறிவியல் மன்றம்) நிறைவுரையாற்ற, கமலக்கண்ணன் நன்றியுரையுடன் முடிந்தது. பங்கு பெற்றோர் சித்தோடு பிரபு ,பிரபாகரன், யாழ் எழிலன், சென்னிமலை இசைக்கதிர், இனியன், பாரதி, சத்தியராஜ், திருமுருகன், மணிமேகலை, புனிதா, பேபி, மோகன் (புலி) பாண்டியன் (சுயமரியாதை சமத்துவக் கழகம்) இளங்கோ, தமிழ்செல்வன், மாதேஷ், கவிப்பிரியா, சண்முகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.

## மதுரையில் ஜாதி ஆணவப் படுகொலையைக் கண்டித்து முற்றுகைப் போராட்டம், கைது!

மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 23.05.2017 அன்று ஆணவப் படுகொலைத் தடைச் சட்டம் இயற்றகோரி முற்றுகை போராட்டம் நடைபெற்றது. ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட பேரையூர் சுகன்யாவை பெற்றோரே எரித்து கொலை செய்ததை கண்டித்தும், தலைமறைவாகியுள்ள கொலைகாரன் சுகன்யாவின் தம்பியை கைது செய்ய கோரியும், ஆணவ படுகொலை தடைச் சட்டத்தை இயற்றாமல் காலங்கடத்தும் தமிழக அரசைக் கண்டித்தும் மதுரை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 23.05.2017 காலை மதுரை,தலைமை தபால் நிலையம் முற்றுகை இடப்பட்டது. முற்றுகையில் ஈடுபட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட் டார்கள். இதில் ஆதித்தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் கபீர் நகர் கார்த்தி, வன வேங்கைகள் பேரவை பொதுச்செயலாளர் இரணியன், கழகத் தோழர்கள் காமாட்சி பாண்டியன், மாப்பிள்ளை சாமி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை பெற்றவர்களை 18 ஆண்டுகளில் விடுதலை செய்யும்போது இராஜீவ் கொலையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை 26 ஆண்டுகளுக்குப் பிறகும் விடுதலை செய்ய மறுப்பது ஏன்? என்ற கேள்வியைத்தான் கேட்டேன்.

தமிழ்நாடு - இப்படி அனைத்து துறைகளிலும் புறக்கணிக்கப்படுகிற மாநிலமாகவே இருக்கிறது. மாடுகள் விற்பனை குறித்து சட்டம் போடும் அதிகாரம் மாநிலத்துக்குத்தான். ஆனால் மத்திய அரசு மாநிலங்களின் உரிமைகளில் தலையிட்டு உத்தரவு போடுகிறது. ஏகலைவனின் கட்டை விரலை 'தானமாகக்' கேட்ட துரோணாச்சாரிகளின் பெயரால்தான் விளையாட்டுக்கான விருதுகளை மத்திய அரசு வழங்குகிறது.

நமது பண்பாடு - மொழி - கல்வி உரிமைகளை இழந்து வரும் நிலையில் இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது. இம்மாநாட்டின் வாயிலாக நான் உங்கள் முன் வைக்கும் கோரிக்கை இது தான்:

இந்தியை அலுவல் மொழியாக அங்கீகரிக்கும் சட்டப் பிரிவுகளையும், பசுவை வெட்டக் கூடாது என்று கூறும் வழிகாட்டும் கொள்கை நெறியில் உள்ள பிரிவையும் நீக்கக் கோரி, நீங்கள் போராட வேண்டும்.

பெரியார் இயக்கம் தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்று நான் நம்புகிறேன்" - என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

காஞ்சி மக்கள் மன்றம் நடத்திய ஜாதி - இந்துத்துவ எதிர்ப்பு கலை நிகழ்ச்சிகளை நீதிபதி அரி பரந்தாமன் மிகவும் விரும்பிக் கேட்டு மேடையிலும் தனது உரையைத் தொடங்கும் முன் கலைக் குழுவினரை மிகவும் பாராட்டினார்.

தனது உரையை முடித்து, மக்கள் மன்றத்தினரின் கலை நிகழ்வுகளை சிறிது நேரம் அமர்ந்து கேட்ட பிறகு, விடைபெற்றுச் சென்றார்.

**பேராசிரியர் ந.முத்து மோகன் பேட்டி அடுத்த இதழில்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 9th June 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN